**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 647/2022

**வா.சா.1**

**திரு. தேவேந்திரன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதிகள் தரப்பில்)**

கணபதி எர்த்மூவர், வாணிப்புத்தூர் என்ற பெயரில் கம்பெனி நடத்தி வருகிறேனா என்றால் இல்லை, வாகனம் தான் வைத்துள்ளேன். நான் கணபதி எர்த்மூவர் என்ற பெயரில் வேலை செய்வதற்கு அரசிடமிருந்து உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. நான் எனது ஆங்கில வழக்குரையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். கணபதி எர்த்மூவர் என்ற பெயரில் நான் வேலை செய்து வருவதை காண்பிக்க கணக்கு புத்தகம் வைத்து பராமரிக்கிறேனா என்றால் ஆமாம். மேற்படி கணக்கு புத்தகத்தை ஆடிட்டரிடம் காண்பித்து கணக்குகளை சரிபார்த்து வருகிறேனா என்றால் ஆமாம். எனது ஆடிட்டரின் பெயர் திரு.அருள், தூக்கநாயக்கன்பாளையத்தை சேர்ந்தவர். வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு பிரதிவாதி எனக்கு எவ்வளவு தொகை கொடுக்கவேண்டும், எவ்வளவு தொகை கொடுத்துள்ளார் என்ற விபரத்தை ஆடிட்டரிடம்

கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. ஆடிட்டர் அறிக்கையை தற்போது வரை தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால் நான் வருமானவரி கட்டவில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. வருமான வரி செலுத்தாமல் எத்தனை ஆண்டுகள் நான் தொழில் செய்து வருகிறேன் என்றால் 25 ஆண்டுகள். 25 ஆண்டுகளில் மொத்தமாக எனக்கு 2.1/2 கோடி வருமானம் வந்திருக்குமா என்றால் சுமார் 60 லட்சம் வந்திருக்கும். மேற்படி ரூ.60 லட்சம் எனக்கு மட்டும்தானா அல்லது எனது பங்குதாரர்களுக்கும் சேர்த்துதானா என்றால் எனக்கு மட்டும் தான். எனக்கு இவ்வளவு வருமானம் வருகிறது எனவே வருமான வரி செலுத்தவேண்டும் என்று எனது ஆடிட்டர் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் 3 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்குரையில் சொத்து விபரத்தில் வரிசை எண்கள் 1 முதல் 5 வரையுள்ள சர்வே எண்களான 744/1, 759/2, 761, 1342/2, 740/2 அனைத்தும் வரிசை எண்கள் 14 முதல் 18 வரை மறுபடியும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வரிசை எண்கள் எதனால் இருமுறை போடப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது வழக்கறிஞருக்கு தான் தெரியும். பிரதிவாதிகளுக்கு குத்தியாலத்தூர் கிராமத்தில் 70 ஏக்கர் நிலம் உள்ளது. வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள வருவாய் ஆவணங்களில் 70 ஏக்கர் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளதா அல்லது 35 ஏக்கர் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 70 ஏக்கர் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும், அதில் 35 ஏக்கர் நிலம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தின்படி பிரதிவாதிகளுக்கு எத்தனை ஏக்கர் பூமி உள்ளது என்று தனித்தனியாக குறித்து கணக்கிட்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் பூமியை சுற்றிலும் அகழி

வெட்டவேண்டும் என்றும், குழிகள் தோண்டவேண்டும், பாறைகள் உடைக்கவேண்டும் என்பது போன்ற பணிகளுக்கு அவர்களுடன் ஒப்பந்தம் ஏதாவது செய்துகொண்டேனா என்றால் இல்லை. மேற்படி பிரதிவாதிகளின் பூமியில் பணிகள் முடிப்பதற்காக இருட்டிபாளையம் என்ற இடத்தில் தங்கி வேலை செய்து வந்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். என்னிடம் யார் யார் ஓட்டுநர்கள், மற்றும் தொழிலாளர்கள் உள்ளார்கள் என்ற விபரத்தை காண்பிக்க விவரபட்டியல் உள்ளதா என்றால் இல்லை. எர்த்மூவர் இயந்திரத்தின் மூலமாக பணி ஆரம்பிப்பதற்கு முன்பாக மீட்டர் ரீடிங் எடுக்கப்படும், பணி முடித்தபின்பு ஒவ்வொரு நாளும் மீட்டர் ரீடிங் எடுக்கப்படும் என்றால் ஆமாம் , அவ்வாறு ஒவ்வொரு நாளும் எடுத்துள்ளேன். அவ்வாறு மீட்டர் ரீடிங் எடுப்பதற்கு ஒரு ரீடிங் புத்தகம் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் பராமரித்து வந்ததாக கூறும் ரீடிங் புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், உள்ளது. மேற்படி ரீடிங் புத்தகத்தில் ஒரு நாளில் எத்தனை மணிநேரம் இயந்திரம் ஓடியது, அதை இயக்கியவர் யார் என்ற விபரம் இருக்கும் என்றால் ஆமாம். எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை மேற்படி இயந்திரம் இயக்கப்பட்டது என்பதை காண்பிக்க டீசல் கணக்கு வைத்துள்ளேனா என்றால் வைத்திருந்தேன், பங்க்கில் வந்து கணக்கு விபரம் சரிபார்த்து சரியாக உள்ளது என்று அகிலன் வாங்கி சென்றுவிட்டார். மேற்படி விபரத்தை வழக்குரையிலும், எனது முதல்விசாரணை சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 10 லி டீசலுக்கு எத்தனை மணிநேரம் இயந்திரம் இயக்க இயலும் என்றால் ஒருமணிநேரத்திற்கு சாதாரணமாக 7 லி. செலவாகும், பாறை போன்று இருந்தால் 8 லி. செலவாகும். ஹிட்டாச்சி வாகனம்

சாதாரணமாக நாள் ஒன்றிற்கு 7 அல்லது 8 மணிநேரம் இயக்கப்படும் என்றால் ஒரு இயந்திரத்திற்கு 2 இயக்குபவர்கள், காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இயங்கும். காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை 2 இயந்திரங்கள் 4 இயக்குபவர்கள் மூலமாக வேலை செய்யப்பட்டு வந்தது என்று நான் பராமரித்து வந்த ரீடிங் புத்தகத்தை தாக்கல் செய்தால் தான் தெரியும் என்றால் ஆமாம். வேலை ஆரம்பித்த தேதியிலிருந்து முடித்த நாள் வரை எவ்வளவு தொகை பிரதிவாதிகள் எனக்கு செலுத்தியுள்ளார்கள் என்றால் ரூ.16,50,000/- செலுத்தியுள்ளார்கள். மேற்படி ரூ.16,50,000/- தொகையானது எத்தனை ஏக்கர் பூமிக்கு வேலை செய்ததற்காக கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் மொத்தமாக ஏக்கர் கணக்கில் பேசவில்லை, ஒருமணிநேரத்திற்கு எவ்வளவு தொகை என்று தான் பேசப்பட்டது. வாய்மொழியாக பேசப்பட்டதாக என்றால் ஆமாம். கடைசியாக எப்போது பணம் கொடுத்தார்கள் என்றால் 29-01-2020 ல் ரூ.50 ஆயிரம் கொடுத்தார்கள். மீதி தொகைகள் காசோலையாக கொடுத்தார்கள். மேற்படி ரூ.16,50,000/- பெற்ற பின்னிட்டு நான் மொத்தம் இவ்வளவு ஏக்கர் நிலம் மேம்பாடு செய்துகொடுத்துள்ளேன் என்று நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. ஏன் அவ்வாறு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் நான் பெற்ற தொகைக்கும், எவ்வளவு நேரம் இயந்திரம் ஓட்டப்பட்டது என்ற விபரத்தை எழுதி ராஜேஷ் என்பவரிடம் கொடுத்தேன். எத்தனை மணிநேரம் அவ்வாறு இயந்திரம் இயக்கப்பட்டது என்றால் 2,324.50 மணிநேரம் ஓட்டப்பட்டது. மேற்படி ஓட்டப்பட்ட நேரத்திற்கு பெற்றுக்கொண்ட தொகை சரிகட்டப்பட்டதா என்றால் இல்லை மீண்டும் தொகை எனக்கு செலுத்தவேண்டும். ரூ. 24,47,750/- எனக்கு செலுத்தவேண்டும் அதை

தான் வழக்குரையில் சொல்லியுள்ளேன். ரூ.16,50,000/- பெற்ற பின்னிட்டு மீண்டும் தொகை செலுத்தினால் தான் நான் வேலை செய்வேன் என்று சொன்னேனா என்றால் நான் மொத்தமாக வேலை செய்த பின்னிட்டு தான் கணக்கு கொடுத்தேன் அதற்காகத் தான் மீதி தொகை வரவேண்டும் என்று சொல்கிறேன். ரூ.16,50,000/- சிறுக சிறுக தான் கொடுக்கப்பட்டது மொத்தமாக கொடுக்கவில்லை அதற்கு பின்னிட்டும் இயந்திரத்தை இயக்கியுள்ளேன். ரூ.16,50,000/- பெற்ற பின்னிட்டு எத்தனை மணிநேரம் இயந்திரத்தை இயக்கினேன் என்றால் முதலில் 17-02-2019 ல் இயந்திரத்தை இயக்க ஆரம்பித்தோம், 01-08-2019 ல் முடித்தேன். மொத்தமாக 2,324.50 மணிநேரம் ஓட்டப்பட்டது.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**